
காலை முரசு

பக்கங்கள்:-22

# உரும்பிராயில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தீ!



யாழ்ப்பாணம், உரும்பிராய் பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று மதியம் ஏற்பட்ட தீ விபத்தில்,எரிபொருள்நிரப்பும்இயந்திரம்ஒன்றுமுற்றாக எரிந்து சேதமடைந்துள்ளது. 05

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | மாசி 24 | ஞாயிற்றுக்கிழமை | 08.03.2026 | அதிர்வு 220



# விலைவாசி உயர்வு தவிர்க்க முடியாதது

## வர்த்தக, வாணிப அமைச்சர் அறிவிப்பு

உலகச் சந்தையில் விலைகள் அதிகரிப்பதைக் கட்டுப்படுத்த முடியாது எனவும், எண்ணெய் மற்றும் எரிவாயு விநியோகம் குறைந்தால் விலை உயர்வு ஏற்படுவது தவிர்க்க முடியாதது எனவும் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். 06

# அமைச்சர் குமார ஜயகொடிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முஸ்தீபு

வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடிக்கு எதிராக அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவரவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

தமது கட்சி ஏகமனதாக எடுத்த தீர்மானத்திற்கு அமைய இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

“ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவினால் அமைச்சருக்கு எதிராக ஏற்கனவே கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளமை மற்றும் நிலக்கரி கொள்வனவு செயல்முறையை சரியாக நிர்வகிக்கத் 06






தமிழர்களின் அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்த மூன்று வழக்குகள் அடுத்து வரும் ஒரு வார காலத்துக்குள் நீதிமன்றங்களுக்கு வருகின்றன. அவற்றில் இரண்டில் நீதிமன்றத்தின் முக்கிய கட்டளை – முடிவு – இந்த தவணைகளின் போது எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதில் முதலாவது வழக்கு யாழ்ப்பாண நகரத்தில் பழைய பூங்காவில் உள்ளக விளையாட்டு அரங்கு அமைப்பது தொடர்பானது. அது வரும் வியாழக்கிழமை 12ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இயங்கும் வடக்கு மாகாண சிவில் மேன்முறையீட்டு மன்றுக்கு வருகின்றது.

இந்த உள்ளக விளையாட்டு அரங்கு அமைப்பதற்கு எதிராக யாழ். மாவட்ட நீதிமன்றில் ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அதனை ஒட்டி அந்த விளையாட்டு மைதான அமைப்பு வேலைகளை முன்னெடுப்பதற்கு இடைக்கால தடை விதித்து யாழ் மாவட்ட நீதிமன்றம் உத்தரவு வழங்கியிருந்தது. எனினும் மீண்டும் புதிய வாதங்களை செவிமடுக்காமல், அந்த தடையை நீடிக்காமல் 06






# மன்னாரில் பெண் பயணிகளுக்குப் பொதுப் போக்குவரத்தில் இடையூறு செய்த இ. போ. ச. காப்பாளருக்குத் தண்டனை

(மன்னார் நிருபர்
எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னாரில் பெண்களுக்குப் பொதுப் போக்குவரத்தின் போது இடையூறு விளைவித்த இலங்கைப் போக்குவரத்து சபையின் காப்பாளருக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளதுடன் பயணிகள் தமது விருப்பப்படி பயணிக்க முழுமையான உரிமை உண்டு என வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் எஸ்.விமலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் பொதுப் போக்குவரத்தில் பெண்களுக்கு ஏற்பட்ட அசௌகரியம் தொடர்பில் அதிகார சபையின் தலையீட்டுடன் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து வெளியிட்டுள்ள விசேட ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கொழும்பில் இருந்து தனியார் பஸ்ஸில் பயணித்து மன்னாரை வந்தடைந்த இரு பெண்கள், அதிகாலையில் தலைமன்னார் நோக்கிச் செல்வதற்காக அங்கிருந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான (இ.போ.ச.) பஸ்ஸில் ஏற முற்பட்டுள்ளனர்.

எனினும், அவர்கள் முன்னர் தனியார் பஸ்ஸில் பயணித்து வந்தமையைக் காரணம் காட்டி, காப்பாளர் பெண்கள் இருவரையும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்ஸ/ல் ஏற்றுவதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட தரப்பினரால் இந்தச் சம்பவம் தொடர்பில் வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபைக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றது.

இவ்விடயம் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு எமது அதிகார சபையால் இலங்கை போக்குவரத்துச் சபையின் (வடக்கு) மன்னார் சாலை முகாமையாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது.

இந்த ஜனநாயக நாட்டில் ஒவ்வொரு குடிமகனும் தாம் விரும்பும் போக்குவரத்து சேவையை தெரிவுசெய்து பயணம் செய்வது அவர்களின் அடிப்படை உரிமையாகும்.

அதிலும் குறிப்பாக, அதிகாலை வேளைகளில் தொழில் நிமித்தமாக பயணம் செய்யும் பெண்கள் பொதுப் போக்குவரத்தில் பாதுகாப்பாகவும் கௌரவத்துடனும் பயணிப்பதற்கான சூழலை உறுதிப்படுத்துவது அனைவரதும் கடமையாகும்.

எமது பணிப்புரைக்கமைவாக, உரிய விசாரணைகளை உடனடியாக மேற்கொண்ட மன்னார் சாலை முகாமையாளர், குறித்த இ.போ.ச. காப்பாளருக்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளமையுடன், அவருக்கு ஒரு நாள் வேதனத்தை தண்டப்பணமாகவும் அறவிட்டுள்ளார் என்ற தகவல் எமக்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பயணிகளின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய இலங்கை போக்குவரத்துச் சபையின் மன்னார் சாலை அதிகாரிகளுக்கு எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இனிவரும் காலங்களிலும் பயணிகளிடம், குறிப்பாக பெண்களிடம் முறையற்ற வகையில் நடந்துகொள்ளும் அல்லது போக்குவரத்துச் சேவை விதிமுறைகளை மீறும் சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் தொடர்பில் பொதுமக்கள் எமது அதிகார சபைக்கு தயக்கமின்றி முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும்.

அதற்காக விசேடமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 0719090900 என்ற இலக்கத்திற்கு வாட்ஸ்அப் ஊடாகத் தகுந்த ஆதாரங்களுடன் உங்களின் முறைப்பாடுகளை அனுப்பி வைக்கலாம்.

பொதுமக்களின் முறையான போக்குவரத்து சேவையை உறுதிப்படுத்த அதிகார சபை தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயலாற்றும். – என்று அதிகார சபையின் தலைவர் ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ்.,மன்னார், மட்டு. அரச அதிபர்கள் பயிற்சி நெறிக்காக இந்தியா பயணம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் மட்டக்களப்பு அரச அதிபர்கள் பயிற்சி வகுப்பு ஒன்றில் பங்குகொள்வதற்காக இன்று இந்தியா பயணிக்கின்றனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன், மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் மற்றும் மட்டக்களப்பு மேலதிக அரச அதிபர் ஆகியோரே பயிற்சி வகுப்பு ஒன்றில் பங்குகொள்வதற்காக இன்று இந்தியா பயணிக்கின்றனர்.

இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தில் இடம்பெறும் அனர்த்த முகாமைத்துவ பயிற்சி நெறியில் பங்குகொள்வதற்காகவே வடக்கு – கிழக்கில் இருந்து இந்த மூவரும் பயணிக்கின்றனர்.

இம் மூவருடன் தென்னிலங்கையின் மாவட்டச் செயலகங்கள், அமைச்சில் இருந்து மேலும். 31பேர் இந்தப் பயிற்சி நெறிக்காக இந்தியா செல்கின்றனர்.

# மட்டக்களப்பில் டீசல் வாகனங்கள் மண்ணெண்ணையில் ஓடுகின்றன

## அதனால் மீனவர்களுக்குப் பாதிப்பு




(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் டீசலில் ஓடும் வாகனங்கள் இபோது மண்ணெண்ணையில் ஓடுகின்றன. இதனால் மண்ணெண்ணை தட்டுப்பாடு ஏற்படும் அபாய நிலை ஏற்பட்டு மீனவர்கள் பாதிக்கப்படுவார்கள். பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அறிவுறுத்தலையும் மீறி சில எரிபொருள் நிரப்பு நிலையங்கள் டீசல் வாகனங்களுக்கு மண்ணெண்ணை வழங்கி வருகின்ற. இந்தச் சட்டவிரோத செயற்பாட்டைக் கண்டறிந்து அதற்கான சட்ட நடவடிக்கையை எடுக்குமாறு அரசாங்க அதிபரிடம் ஈ.பி.டி.பி கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் வர்த்தகருமான அந்தனிசில் ராஜ்குமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு பாலமீன்மடுவில் உள்ள அவரது காரியாலயத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள யுத்த சூழல் காரணமாக இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ள நேரத்தில் மீனவர்களுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணை எல்லா எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் டீசல் வாகனங்களுக்கு பயன்படுத்துகின்றனர்.

பெற்றோலியக் கூட்டுதாபனத்தின் பிராந்திய முகாமையாளரினால் 26-6-2025 இல் அனைத்து எரிபொருள் விநியோகிக்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் கசிதம் அனுப்பப்பட்டுள்ளது. டீசலில் ஓடும் வாகனங்களுக்கு மண்ணெண்ணெய் வழங்க வேண்டாம்என்றும்மண்ணெண்ணையை பயன்படுத்துவதை நிறுத்துமாறும் கடிதம் மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

இப்போது மட்டக்களப்பில் டீசலை விட தனியார் பஸ்கள், பார ஊர்திகள், ல போன்ற வாகனங்கள் மண்ணெண்ணையில் ஓடிக் கொண்டிருக்கின்றனர். மீன்பிடியில் ஈடுபடும் வெளி இயந்திர படகு உரிமையாளர்களுக்ககு மண்ணென்னை முடிந்து போனால் டீசலில் இந்த இயந்திர படகுகள் இயங்க முடியாது.

வடக்கு கிழக்கில் நவம்பர் மாதத்திலிருந்து மார்ச் மாதம் வரைக்கும் கடல் சீற்றம் காரணமாக மீனவர்கள் கடலுக்கு செல்ல முடியாது. மீனவர்கள் மார்ச் மாதத்தில் இருந்து நவம்பர் மாதம் வரைக்கும் கடலுக்கு செல்லும் காலம். அந்த காலத்தில் மீனவர்களுக்கு வழங்கப்படுகின்ற மண்ணெண்ணையை டீசல் வாகனங்களுக்கு வழங்கினால் பாதிக்கப்பட போவது மீனவர்கள்.

கரடியனாறு பிரதேசத்தில் கனரக வாகனங்களைச் சோதனை செய்தால் தெரியும் எவ்வளவு டீசல் வாகனங்கள் மண்ணெண்ணையில் ஓடுகின்றம என்பது. இன்று மாவட்டத்தில் டீசலின் விற்பனையை விட மண்ணெண்ணெய் விற்பனை அதிகரித்துள்ளது.

இவ்வாறு மண்ணெண்ணையை டீசல் வாகனங்களுக்கு பயன்படுத்துவதற்கு தொடர்ந்து எல்லா எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் ஒரு கட்டுப்பாடுமமின்றிமண்ணெண்ணையை விநியோகம் செய்தால் எதிர்வரும் மாதத்தில் மீனவர்கள் மண்ணெண்ணை இன்றி கடலுக்கு செல்ல முடியாத அசாதாரண சூழ்நிலை ஏற்படும்.

கடந்த காலத்தில் ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட மண்ணெண்ணை மாத்திரம் வழங்கப்பட்டது. இந்த மண்ணெண்ணை ஒரு எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு பவுசர் என்ற அடிப்படையிலும் சில மீனவர்கள் அண்டிய பிரதேசங்களில் இருக்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இரண்டு பவுசர் என்ற அடிப்படையிலும் வழங்கப்பட்டது.

ஆனால் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எல்லா எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் கடிதம் அனுப்பியும் அந்த கடிதத்தை கருத்தில் கொள்ளாது சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கலனில் மண்ணெண்ணையைக் கொடுக்காமல் டீசல் வாகனங்களுக்கு அங்கு வைத்து மண்ணெண்ணையை நிரப்பி அனுப்புகின்றனர்.

எனவே கடந்த காலத்தில் செயல்படுத்தியது போல மீனவர்கள் அண்டிய பிரதேசத்தில் இல்லாத எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட மண்ணெண்ணை வழங்குமாறு பெற்றோலிய கூட்டு தாபனத்திடம் கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

அதேவேளை மாவட்டத்தில் இந்த சட்டவிரோத செயற்பாட்டை கட்டுப்படுத்துவதற்கான விசாரணைகளை அரசாங்க அதிபர் தலைமையில் பொலிஸார் உள்ளிட்ட அரச அதிகாரிகள் கொண்ட குழுவை அமைத்து, திடீர் வீதிச் சோதனைகளை செய்து, இந்த மணணெண்ணையில் ஓடுகின்ற வாகனங்களை கண்டறிந்து, அதற்கான சட்ட நடவடிக்கையை எடுக்குமாறு அதிபரிடம் விநயமாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு அரசாங்கத்தால் பல நிவாரணங்கள் அறிவிக்கப்பட்ட போதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மீனவர்களுக்கான நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை. ஆனால் கடந்த அரசாங்கத்தில் கடற்றொழில் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தா மீனவர்களுக்கு மண்ணெண்ணை மானியம், வீடுகள், உலர் உணவு பொதிகள் என சலுகைகளை வழங்கியிருந்தார்.

கடந்த காலத்தில் மழை பெய்த போது நெல்லை காய வைக்காமல் விவசாயிகள் மிகவும் சிரமப்பட்டார்கள். எனவே வெள்ளம் வந்த பின்னர் அணை கட்டுவதில் எந்த பயனும் இல்லை. ஆகவே விவசாயிகள் பாதிக்கப்பட்டமை போல மீனவர்களும் பாதிக்கப்படக் கூடாது.

வாழைச்சேனை, களுவங்கேணி, பாலமீன்மடு ஆகிய பிரதேசங்களில் மீனவர்களுக்கான மண்ணெண்ணை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு மண்ணெண்ணையை வழங்கி, ஏனைய எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு இந்த மண்ணெண்யை மட்டுப்படுத்தி, வழங்காமல் விட்டால், எதிர்வரும் காலங்களில் மீனவர்களுக்கான மண்ணெண்ணை தட்டுபாடு ஏற்படும். இதனால் மீனவர்கள். விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும்.

எனவே எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவரும் மீனவர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு செயற்படவும். – என்றார்.



# மரக்கறிகளின் விலை சடுதியாக உயர்ந்தது

நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தில் குடை மிளகாய் வகைகளுக்குத் தொடர்ச்சியாக அதிக கேள்வி நிலவி வருகின்றது.

இதனால், ஒரு கிலோ மஞ்சள் மற்றும் சிவப்பு குடை மிளகாய் ஆயிரத்து 400 ரூபாய்க்கும் பச்சை குடை மிளகாய் 800 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

அத்துடன், கறிமிளகாய் ஒருகிலோ 350 ரூபாய்க்கு விற்பனையாகின்றது.

மேலும் தக்காளி ஒரு கிலோ 750 ரூபாய்க்கு நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தில் விற்பனையாகின்றது.

கோவா ஒரு கிலோ 190 ரூபாய்க்கும், கரட் ஒரு கிலோ 300 ரூபாய்க்கும், லீக்ஸ் ஒரு கிலோ 180 ரூபாய்க்கும் மற்றும் பீட்ரூட் ஒரு கிலோ 100 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

அத்துடன், உருளைக்கிழங்கு ஒரு கிலோ 280 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது.

# ஏப்ரலில் மின்வெட்டு அமுல்படுத்தப்படுமா?

## வலுசக்தி அமைச்சு விளக்கம்

நுரைச்சோலை லக்விஜய மின் நிலையத்தின் நிலக்கரி விநியோகத்தில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் ஏப்ரல் மாதத்தில் மின்வெட்டு அமுல்படுத்தப்படலாம் என்றும் பரவி வரும் செய்திகள் முற்றிலும் உண்மைக்கு புறம்பானவை என வலுசக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

வலுசக்தி அமைச்சு விடுத்துள்ள விசேட அறிக்கையில், நுரைச்சோலை மின்நிலையத்தின் எதிர்காலத் தேவைகளுக்காக முன்பதிவு செய்யப்பட்ட 36 நிலக்கரி கப்பல்களில் 22 கப்பல்கள் ஏற்கனவே நாட்டை வந்தடைந்துள்ளன.

அந்த நிலக்கரித் தொகுதிகள் தற்போது தரையிறக்கப்பட்டுள்ள நிலையில், மின்நிலையத்தின் செயற்பாடுகள் எவ்வித இடையூறுமின்றி வழமை போல் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

மீதமுள்ள நிலக்கரி விநியோகங்களையும் எவ்வித தடையுமின்றி வழங்க முடியும் என விநியோகஸ்தர்கள் உறுதி அளித்துள்ளனர்.

அத்துடன், மின் உற்பத்திக்காக அவசியமான எரிபொருள் கையிருப்பும் ஏப்ரல் மாத இறுதி வரை போதுமான அளவு காணப்படுவதாக அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

இதன்படி, எதிர்வரும் மாதங்களில் மின்வெட்டை அமுல்படுத்த வேண்டிய தேவை ஏற்படாது என்பதை வலுசக்தி அமைச்சு பொதுமக்களுக்குத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.



# உரும்பிராயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எரிபொருள் தாங்கி ஊர்தியிலிருந்து, எரிபொருள் நிரப்பு நிலையத்தின் நிலக்கீழ் சேமிப்புத் தொட்டிக்குள் எரிபொருளை நிரப்பிக் கொண்டிருந்த போதே இந்தத் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக அங்கிருந்த எரிபொருள் நிரப்பும் இயந்திரம் ஒன்றின் ஒரு பகுதி முற்றாக எரிந்து கருகியது.

சம்பவம் குறித்துத் தகவல் அறிந்த யாழ்ப்பாண மாநகர சபையின் தீயணைப்புப் படையினர் உடனடியாக அவ்விடத்திற்கு விரைந்து செயற்பட்டனர்.

அவர்களின் துரித முயற்சியால் தீ ஏனைய பகுதிகளுக்குப் பரவாமல் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது.

இந்த விபத்தின் போது பல நூறு லீற்றர் பெற்றோல் தீயில் எரிந்து வீணாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதிர்ஷ்டவசமாகப் பெரும் உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.










# நாம் விரும்பாத நிலையிலும் இலங்கைத் தீவு ஒருவித போர்ச் சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ளது

## பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல கருத்து

நாம் விரும்பாத ஒரு சூழலுக்கு மத்தியிலும், நாடு ஒருவித போர் நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இந்தக் கருத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

யார், எப்போது, எவ்வாறு பாதிக்கப்பட்டவர்களாக மாறுவார்கள் என்பதை எதிர்வு கூற முடியாத ஒரு நிலைமை உலகில் உருவாகியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் காலி கடற்பரப்பில் விபத்துக்குள்ளான 'ஐசுஐளூ னுநயெ' கப்பல் சம்பவம் இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும் என பிரதி அமைச்சர் சுனில் வட்டகல கூறியுள்ளார்.



கராபிட்டிய வைத்தியசாலைக்கு திடீரென ஏற்க நேரிட்ட பொறுப்பைப் போன்ற ஏனைய பொறுப்புகளை யார், எப்போது, எவ்வாறு ஏற்க நேரிடும் என்பதை எம்மால் ஊகிக்க முடியாது. இவ்வாறானதொரு நிலைமை எமது நாட்டின் பொதுமக்களின் வாழ்க்கையில் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தை எம்மால் முன்கூட்டியே கணிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கும் கராபிட்டிய வைத்தியசாலை இந்த யுத்தத்தினால் சடலங்களால் நிரம்புவதற்கு ஒரு நாளே போதுமானதாக இருந்தது. இதனால்தான் நாம் தயாராக இருக்க வேண்டும். நாம் முன்னெச்சரிக்கைப் பாதுகாப்பு உபாயங்களைப் பயன்படுத்த வேண்டும் என பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் எமக்கு 'அயர்ன் டோம்' (ஐசழுெ னுழஅந) பாதுகாப்பு கவசம் கிடைத்துவிடப் போவதில்லை. ஆனால், எம்மால் முடிந்தவரை தயாராவதற்கான வாய்ப்பு இதன் மூலம் கிடைக்கும். – என்றும் அவர் கூறினார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விடும் உத்தரவை யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம் வழங்கியிருந்தது.

அதற்கு எதிராக மனுதாரர்கள் தரப்பினால் வடக்கு சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மீளாய்வு மற்றும் மேன்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இரண்டு நீதிபதிகள் முன்னிலையில் விசாரிக்கப்பட்ட இந்த மேன்முறையீடு மற்றும் மீளாய்வின் மீதான தீர்ப்பே வரும் வியாழக்கிழமை வர இருக்கின்றது.

இதே சமயம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை நடத்துவதற்கு எதிராக திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு வரும் வெள்ளிக்கிழமை 13 ஆம் திகதி நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றது.

இந்த வழக்கில் இடையீட்டு மனுதாரராக சேர்ந்து கொள்வதற்காக ஒருவர் தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தின் மீது அந்த வழக்கில் புதிய எதிராளியாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தின் பதில் மனு தாக்கலுக்காகவே வரும் வெள்ளியன்று இந்த வழக்கு மன்றில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றது.

பெரும்பாலும் இந்த வழக்கு மீண்டும் ஒரு திகதிக்கு தவணை இடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அடுத்த வழக்கு வரும் 16ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இயங்கும் வடக்கு மாகாண மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு வருகின்றது.

சாவகச்சேரி நகர சபை மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவற்றுக்கான உள்ளூராட்சித் தேர்தல்களை ஒட்டி தாக்கல் செய்யப்பட்ட அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர்கள் பட்டியலை அடியோடு நிராகரிக்கும் உத்தரவை வழங்குமாறு கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களே அன்றைய தினம் தீர்ப்புக்காக நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றன.

இந்த மூன்று வழக்குகளிலும் சம்பந்தப்பட்ட ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தற்போது புதுடில்லியில் நடைபெறும் சட்டத்தரணிகள் சங்க நிகழ்வில் பங்குபற்றுவதற்காக அங்கு புறப்பட்டு உள்ளார். அவர் வரும் 11ஆம் திகதி புதன் கிழமை நாடு திரும்பிய பின்னர் அடுத்து வரும் நாள்களில் நடைபெறும் மேற்படி வழக்குகளின் போது நீதிமன்றில் முன்னிலையாவாரென எதிர்பார்க்கப்படுகின்றது.

# பெப்ரவரியில் 729 மில்லியன் டொலர் அந்நியச் செலாவணி வருமானம்

## மத்திய வங்கி அறிக்கை

இலங்கையின் வெளிநாட்டுத் தொழிலாளர்களினால் நாட்டுக்கு அனுப்பப்படும் பணம் கடந்த பெப்ரவரி மாதத்தில் 729 மில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் வெளிநாட்டுத் தொழிலாளர் வருமானம் 548.1 மில்லியன் டொலர்களாகக் காணப்பட்டது. இதனுடன் ஒப்பிடுகையில், 2026 பெப்ரவரி மாத வருமானம் 180.9 மில்லியன் டொலர்களினால் அதிகரித்துள்ளது.

நடப்பு ஆண்டின் ஜனவரி மாதத்தில் 751.1 மில்லியன் டொலர்கள் வருமானமாகக் கிடைத்துள்ளது. அதனுடன் ஒப்பிடும்போது பெப்ரவரி மாதத்தில் வருமானத்தில் சிறிய வீழ்ச்சி காணப்பட்டபோதிலும், ஒட்டுமொத்த வளர்ச்சி திருப்திகரமாக உள்ளதாக மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

2026 ஆம் ஆண்டின் முதல் இரு மாதங்களில் வெளிநாட்டுத் தொழிலாளர்களால் நாட்டுக்கு அனுப்பப்பட்ட மொத்தப் பணம் 1.48 பில்லியன் டொலர்களாகும். இது கடந்த ஆண்டின் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் 32 சதவீத வளர்ச்சியாகும்.

இலங்கையின் தற்போதைய பொருளாதாரச் சூழலில், அந்நியச் செலாவணி கையிருப்பை உறுதிப்படுத்துவதில் புலம்பெயர் தொழிலாளர்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## விலைவாசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏற்கனவே உலகளவில் விலை உயர்வு பதிவாகியுள்ள நிலையில், அந்த அதிகரிப்பை நாமும் நிச்சயமாகச் சுமக்க வேண்டியிருக்கும் எனவும், இது யாராலும் தடுக்க முடியாத ஒரு நிலைமை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள தற்போதைய சூழல் முழு உலகிற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் ஒன்றாகும். குறிப்பாகக் கடல் வழிப் பாதைகளைப் பயன்படுத்தி இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளை மேற்கொள்ளும் ஒவ்வொரு நாட்டிற்கும் இது ஒரு பெரும் பிரச்சினையாக அமையும் என ஊடகங்களிடம் அவர் சுட்டிக்காட்டினார்.

அமைச்சர் வசந்த சமரசிங்க மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

"மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள நிலைமை முழு உலகிற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் ஒன்றாகும். குறிப்பாகக் கப்பல் போக்குவரத்துப் பாதைகளைப் பயன்படுத்தி இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளை மேற்கொள்ளும் ஒவ்வொரு நாட்டிற்கும் இது ஒரு பிரச்சினையாகும். உலகச் சந்தையில் ஏற்படும் விலை உயர்வை எம்மால் கட்டுப்படுத்த முடியாது. ஏனெனில் எண்ணெய் மற்றும் எரிவாயு விநியோகம் குறைந்தால் விலைகள் உயரும். ஏற்கனவே விலை உயர்வு பதிவாகி வருகின்றது, அந்த அதிகரிப்பை நாமும் நிச்சயமாகச் சுமக்க வேண்டியிருக்கும். அதனை எம்மால் தடுக்க முடியாது" எனத் தெரிவித்தார்.

## அமைச்சர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தவறியமை ஆகிய இரண்டு காரணிகளின் அடிப்படையில் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவர நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

"ஐக்கிய மக்கள் சக்தியுடன் எதிர்க்கட்சியில் செயற்படும் ஏனைய குழுக்களுடனும் கலந்துரையாடி, பரந்தளவிலான ஆதரவைப் பெற்றுக்கொள்ள நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.

"அதேபோல், அரசாங்கத்திற்குள் இருந்து கொண்டு தமது தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் சுதந்திரமாக வாக்களிக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் எமக்கு ஆதரவு வழங்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்" என அவர் மேலும் குறிப்பிட்டார்.


GOLDEN VOICE
OF NORTH
குரல்
தேர்வு
விரைவில்...!
a one
MEDIA NETWORK
MURASU
digital
tamil one

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மகளிர் மாண்பு

இன்று சர்வதேச மகளிர் தினம். ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8 அன்று இத்தினம் உலகளவில் கொண்டாடப்படுகிறது.

இது அரசியல், சமூக, பொருளாதார மற்றும் கலாசாரத் துறைகளில் பெண்களின் சாதனைகளைப் பாராட்டும் நாளாகவும், பாலின சமத்துவம், உரிமைகள் மற்றும் விழிப்புணர்வை வலியுறுத்தும் தினமாகவும் அமைகிறது.

பெண்கள் சட்ட ரீதியாக சம உரிமை பெறுவதை உறுதி செய்யவும், குடும்பம், தொழில் மற்றும் சுகாதாரத் துறைகளில் பாலினப் பாகுபாடற்ற சூழலை உருவாக்கவும், வன்முறையற்ற சமுதாயத்தை வலியுறுத்தவும் இந்த நாள் பயன்படுத்தப்படுகிறது.

*1917* இல் ரஷ்யப் பெண்கள் போராட்டத்தின் மூலம் உருவான இந்தத் தினம், இன்று பெண்களின் முன்னேற்றத்தைக் கொண்டாடும் ஒரு முக்கிய உலகளாவிய நிகழ்வாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு ஆண்டும் மகளிர் தினத்துக்கு ஐ.நா. மகளிர் அமைப்பு ஒரு கருப்பொருளை முன்மொழிகிறது. இந்த ஆண்டிற்கான சர்வதேச மகளிர் தினத்திற்குரிய ஐக்கிய நாடுகள் சபையின் உலகளாவிய கருப்பொருள் "உரிமைகள் - நீதி - செயல் - அனைத்துப் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்காக" *(Rights - Justice - Action - For All Women and Girls)* ஆகும். இந்தக் கருப்பொருள் உலகெங்கிலும் உள்ள பெண்கள் மற்றும் சிறுமிகளின் சம உரிமைகள் மற்றும் நீதியை உறுதி செய்வதை வலியுறுத்துகிறது. இது குறிப்பாக பாகுபாடான சட்டங்கள் மற்றும் சமூகத் தடைகளை நீக்குவதில் கவனம் செலுத்துகிறது.

இலங்கையில் இந்த ஆண்டுக்கான சர்வதேச மகளிர் தினம் தேசிய விழா மாத்தறையில் கொண்டாடப்படவுள்ளது. இது உலகளாவிய கருப்பொருளுடன் இணைந்து 'நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதற்காக - அவள் வலுவான வழிகாட்டியாக இருப்பாள்' என்ற அடிப்படையில் அமையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மகளிர் தின இணையத் தளம் இந்த ஆண்டுக்கான பிரசாரக் கருப்பொருளாக *'Give To Gain'* ('ஈட்டுவதற்காகக் கொடுத்தல்') என்பதை அறிவித்துள்ளது. இது பெண்களின் முன்னேற்றத்திற்காக வளங்கள், அறிவு மற்றும் நேரத்தை வழங்குவதன் மூலம் பாலின சமத்துவத்தை உருவாக்குவதை ஊக்குவிக்கிறது.

'ஈட்டுவதற்காகக் கொடுத்தல்' என்பது ஒரு தத்துவம். இது இவ்வாண்டிற்கான சர்வதேச மகளிர் தினம் மற்றும் சமூக நடவடிக்கைக்கான முக்கிய கருப்பொருளாகும். அறிவு, ஆதரவு மற்றும் வளங்களைப் பகிர்வது கூட்டு, பரஸ்பர முன்னேற்றத்தை உருவாக்குகிறது என்பதை வலியுறுத்துகிறது. இது பரஸ்பரத்தை ஊக்குவிக்கிறது. மற்றவர்களை ஆதரிப்பது தனிப்பட்ட வளர்ச்சிக்கும், வலுவான சமூகங்களுக்கும், பரஸ்பர பகிர்வுக்கும் வழிவகும் என்பதைச் சுட்டுகின்றது.

''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்'' என்று பாடிய பாரதியின் கண்களினூடே பெண்ணியத்தைப் பார்த்துப் பெருமிதம் கொள்வோம். அனைத்து நிலைகளிலும் ஆணுக்கு நிகராகப் பெண்மையை வைத்து அழகு பார்த்து மதிப்பது தான் பெண்ணியத்தைப் போற்றும் மாண்பாக அமைய வேண்டும்.




# பெண்களது முன்னேற்றத்துக்கு பெண்கள்தான் ஒரே எதிரி...!

## (இன்று மார்ச் - 08 சர்வதேச மகளிர் தினம்)

பாரதியார் கனவு கண்ட 'புதுமைப் பெண்' எப்படி இருப்பாள் என்பதை இந்த வரிகள் அழகாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

*நிமிர்ந்த நன்னடை நேர்*
*கொண்ட பார்வையும்,*
*நிலத்தில் யார்க்கும் அஞ்சாத*
*நெறிகளும்,*
*திமிர்ந்த ஞானச் செருக்கும்*
*இருப்பதால்*
*செம்மை மாதர் திறம்புவ*
*தில்லையாம்."*

நிமிர்ந்த நன்னடை - தன்னம்பிக்கையோடு நடப்பவள், நேர் கொண்ட பார்வை - எதற்கும் அஞ்சாமல் நேருக்கு நேராகப் பார்க்கும் துணிச்சல் கொண்டவள், அஞ்சாத நெறிகள் - யாருக்காகவும் தனது கொள்கைகளை விட்டுக்கொடுக்காதவள், ஞானச் செருக்கு - அறிவால் உண்டாகும் பெருமிதம் கொண்டவள் என இவ்வாறாகப் பாரதியார் கண்ட புதுமைப் பெண் கணப்படுகிறாள்.

பாரதியார் கண்ட "புதுமைப் பெண்" கனவு, இன்று எந்த அளவுக்கு நினைவாகியுள்ளது என்பதை தற்காலச் சூழலோடு ஒப்பிட்டுப் பார்ப்போம்.

அவரது கனவுகள் பல துறைகளில் நிஜமாகியுள்ளன. சிலவற்றில் இன்னும் முன்னேற்றம் தேவைப்படுகிறது.

அன்று பெண்கள் வீட்டு நிர்வாகத்துக்குமட்டுமேஉட்பட்டிருந்தனர். இன்று பல நிறுவனங்களின் தலைமைப் பொறுப்புகளில் பெண்கள் பெரும்பான்மையான உள்ளனர். சுயதொழில் தொடங்குவதிலும், தொழில்முனைவோராவதிலும் பெண்கள் சாதித்து வருகின்றனர். பொருளாதார ரீதியாக தனித்துவம் மிக்கவர்களாகவும் உள்ளனர்.

அன்று வாக்குரிமையைக் கூட பெண்கள்போராடிப் பெற வேண்டியிருந்தது. இன்று நாட்டின் குடியரசுத் தலைவர், அமைச்சர்கள் மற்றும் நீதிபதிகள் என உயர்



சுகிர்தராஜ் சரஸ்வதி

**எந்த ஒரு பெண் தன் சார்ந்த பெண்களது முன்னேற்றத்தில் தடையாகக் காணப்படுகிறாளோ அவள் தனது முன்னேற்றத்துக்குத் தானே குழி தோண்டுகிறாள் என்பதுதான் உண்மை நிலைவரம்.**

பதவிகளில் பெண்கள் அமர்ந்து சட்டம் இயற்றி வருகின்றனர். உள்ளூராட்சி அமைப்புகளில் பெண்களுக்கான இடஒதுக்கீடு கணிசமான அளவு உள்ளது.

பெண்கள் தங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகப் போராடும் துணிச்சல் பெற்றவர்களாக இன்று சமூகத்தில் மிளிர்கின்றனர். தமக்காக மட்டுமன்றித் தம்மைச் சார்ந்தோருக்காகவும் பெண்கள் இன்று வெளியே வருகின்றனர்.

இவை பாரதியின் கனவை நனவாக்கி வருகிறது என்றாலும் முழுமையாக இல்லை என்றே கூறமுடியும்.

பாரதியின் கனவு நனவாகி வருகிறது என்றாலும் அவரது கனவு முழுமைபெறாது இருப்பதற்கும் பெண்கள்தான் காரணமாக இக்கின்றனர். பெண்களுக்கு எதிரி பெண்களாகவே இருக்கின்றனர். ஓர் ஆளுமை கொண்ட பெண்ணை முடக்கிவைப்பது அவர்களைச் செயற்பட விடாது தடுப்பது கூட அடக்குமுறைக்குள்தான் உள்ளது.

பெண்களால் அடக்கப்படும் பெண்கள் பற்றி நாம் இங்கு ஆராய வேண்டியது காலத்தின் கட்டாயமாகவும் தேவைப்பாடாகவும் உள்ளது. இது மிகவும் ஆழமான மற்றும் விவாதிக்கப்பட வேண்டிய ஒரு விடயம். பாரதியார் "பெண் விடுதலை" பற்றிப் பாடியபோது, ஆண்கள் பெண்களுக்கு இழைக்கும் அநீதிகளை மட்டும் சாடவில்லை, பெண்களுக்குத் தடையாக இருக்கும் பெண்கள் பற்றியும் சாடினார். துரதிர்ஷ்டவசமாக, இன்றும் சில இடங்களில் "பெண்ணுக்குப் பெண்ணே எதிரி" என்ற நிலை நிலவுகிறது.

பெண்களால் பெண்கள் அடக்கப்படுவதற்கு என்ன காரணம் என்பது தொடபிலும் ஆராய வேண்டும்.

இங்கு ஆணாதிக்கச் சிந்தனையின் தாக்கம் என்று கூற முனைந்தாலும் உண்மை அது இல்லை. பெண்களது முன்னேற்றத்துக்கு ஆண்கள் வழிவிட்டாலும் பதவியில் உள்ள பெண்கள் மற்றைய பெண்கள் தம்மை விஞ்சிவிடுவார்களோ என்ற எண்ணத்திலும் ஒரு விதமான தாழ்வு மனப்பான்மையிலும் மற்றப் பெண்களைக் குறைகூறிக்கொண்டும் அவர்களைச் செயற்பட விடாதும் தடுத்துவருகின்றனர்.

இது அலுவலகமாக இருந்தாலும் சரி சில கூட்டுக் குடும்பங்களிலும் சரி ஏன் தனிக் குடும்பங்களிலும் இவ்வாறான செயற்பாடுகள் காணப்படுகின்றன.

ஒரு சில கூட்டுக் குடும்பங்களில் மாமியார் - மருமகள் சண்டைகள் இதற்கு ஒரு சிறந்த உதாரணம்.

சில பெண்கள் சமூகத்தின் பார்வையில் தான் ஒரு "நல்ல பெண்" என்று காட்டிக்கொள்வதற்காக, மற்ற பெண்களின் சுதந்திரத்தைத் விமர்சிக்கிறார்கள். இது உண்மையில் அவர்கள் அவர்களுக்கே பூசிக்கொள்ளும் ஒரு

தொடர்ச்சி▼

# பெண்களது முன்னேற்றத்துக்கு பெண்கள்தான் ஒரே எதிரி...!

தொடர்ச்சி▲

விதமான சேறு என்றுதான் கூற முடியும்.

போதிய கல்வி மற்றும் விழிப்புணர்வு இன்மையும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம் என்றுதான் கூற முடிகின்றது.

தன்னுடைய உரிமைகள் என்னவென்று தெரியாத ஒரு பெண், மற்றுமொரு பெண்ணின் உரிமையைப் பறிப்பதில் தவறில்லை என்று நினைக்கிறாள். "அறிவு வேட்கை" இல்லாததே இதற்கு அடிப்படை காரணம் என்று பாரதியார் கூறியுள்ளார்.

பெண்கள் ஒருவரை ஒருவர் அடக்குவதை நிறுத்திவிட்டு, ஒருவருக்கொருவர் துணையாக நிற்க வேண்டும். ஒரு பெண் முன்னேறும்போது மற்றொரு பெண் அவளுக்கு ஏணியாக இருக்க வேண்டும். தவிர குழி பறித்து அந்தக் குழியில் தாமே விழும் நிலைக்குச் செல்லக் கூடாது.

பெண் கல்வி என்பது வெறும் வேலைக்காக மட்டுமல்ல, சக மனிதர்களை மதிக்கும் பண்பையும் வளர்க்க வேண்டும்.

ஒட்டுமொத்தத்தில் பாரதி கண்ட புதுமைப் பெண், ஆண்களை எதிர்த்துப் போராடுவது மட்டுமல்ல, தனக்குள் இருக்கும் ஆணாதிக்கச் சிந்தனைகளையும், சக பெண்களைத் தாழ்த்தும் மனப்பான்மையையும் எதிர்த்துப் போராட வேண்டும். "பெண்ணின் பலம் மற்றொரு பெண்ணின் ஆதரவில் இருக்கிறது" என்பதை உணரும் போதுதான் உண்மையான பெண் விடுதலை சாத்தியமாகும்.

பாரதி கண்ட கனவு ஒரு காலத்தில் நிறைவேறியிருந்தாலும் அதாவது "இரவில் பெண்கள் அச்சமின்றி நடக்கும் நிலை" கால ஓட்டங்கள், மாற்றங்களால் இன்று அச்சத்தில்தான் உள்ளது.

ஒரே வேலைக்கு ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமான ஊதியம் வழங்கும் நிலை இன்றும் சில தனியார் துறைகளில் இன்னும் கேள்விக் குறியாகவே உள்ளது.

பெண் கல்வியில் முன்னேறினாலும், குடும்பப் பொறுப்புகள் அனைத்தையும் பெண்கள் மட்டுமே சுமக்க வேண்டும் என்ற ஆணாதிக்கச் சிந்தனை இன்னும் மாறவில்லை என்ற நிலைமைதான் இன்றும் காணப்படுகிறது. ஓரிரு விதிவிலக்குகள் காணப்பட்டாலும் பெரும்பாலும் ஆணாதிக்கத்துக்குள்தான் பெண்கள் இன்றும் உள்ளனர். பெண்தானே என்ற இழிந்த சிந்தனைதான் இதற்கு முதல் காரணமாக உள்ளது. ஆண்களது எல்லா தேவைகளுக்கும் ஏதோ ஒரு வகையில் பெண் உறுதுணையாக இருக்கும் போதிலும் அங்கு அவளுக்கான இடம் இரண்டாம் நிலையில்தான் உள்ளது.

ஒரு தாயாக, தாரமாக, மகளாக, சகோதரியாக என்று பல்வேறு நிலைகளில் பெண்கள் உள்ளபோதும் அவர்கள் பெண்கள்தானே என்ற ஏளனம் இன்றும் உள்ளதை எவராலும் மறைக்க முடியாது.

பெண்கள் அனைத்துத் தடைகளையும் உடைத்து முன்னேறி வருகின்றனர். அவர் கண்ட 'புதுமைப் பெண்' இன்று நிஜமாகி வரகின்றாள். அவள் இன்னும் முழுமையான சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் பெறச் சமூகம் மாற வேண்டும். முக்கியமாகச் சமூகத்தில் உள்ள பெண்கள் மாற்றம் பெற வேண்டும்.

"பெண் அறிவு இப்புவி உய்யும்" என்றார் பாரதி. ஒரு சமூகத்தின் முன்னேற்றம் என்பது அந்தச் சமூகத்தில் பெண்கள் எவ்வளவு மதிக்கப்படுகிறார்கள் என்பதைப் பொறுத்தே அமைகிறது. அதுவும் பெண்களால் பெண்கள் எவ்வாறு மதிக்கப்படுகிறார்கள் என்பதைப் பொறுத்தே உள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 8 ஆம் திகதி 'சர்வதேச மகளிர் தினம்' உலகம் முழுவதும் கடைப்பிடிக்கப்படுகிறது. இது கொண்டாடப்படுவதுடன் மட்டும்



அற்றுப்போய்விடுகிறது. நடைமுறையில் அதற்கு உரித்தான எந்த விதமான செயற்பாடுகளும் நடைமுறையில் இல்லை.

இன்றைய காலகட்டத்தில் பெண்கள் கால் பதிக்காத துறை களே இல்லை எனலாம்.

நாட்டின் உயரிய பதவிகள் முதல் விண்வெளி ஆராய்ச்சி வரை பெண்கள் சாதனை படைத்து வருகின்றனர்.

குடும்ப நிர்வாகம் மட்டுமின்றி, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பெண்கள் பெரும் பங்காற்றுகின்றனர்.

"ஒரு பெண்ணுக்குக் கல்வி புகட்டுவது ஒரு குடும்பத்துக்கே கல்வி புகட்டுவதற்குச் சமம் என்பதற்கு ஏற்ப பெண்கள் கல்வியில் சிறந்து விளங்குகின்றனர்.

பெண்கள் என்பவர்கள் வெறும் மென்மையானவர்கள் மட்டுமல்ல, அவர்கள் வலிமையானவர்கள். அவர்களுக்குத் தேவைப்படுவது அனுதாபம் அல்ல, சம வாய்ப்பும் அங்கீகாரமுமே. பெண்களைப் போற்றுவோம், அவர்களின் உரிமைகளை மதிப்போம். பெண்மை போற்றும் சமூகமே உண்மையான வளர்ச்சி அடைந்த சமூகமாகும்.

பெண்களே பெண்களை முன்னேற விடுங்கள். அதன்மூலம் நீங்களும் முன்னேறுங்கள். எந்த ஒரு பெண் தன் சார்ந்த பெண்களது முன்னேற்றத்தில் தடையாகக் காணப்படுகிறாளோ அவள் தனது முன்னேற்றத்துக்குத் தானே குழி தோண்டுகிறார் என்பதுதான் உண்மை நிலைவரம்.

## மென்மை கலந்த வலிமை பெண்...!

மழலையாய் சிரிப்பவள்
மகளாய் மகிழ்விப்பவள்
தாயாய் உயிர் காப்பவள்
தமக்கையாய் வழிநடத்துபவள்!

வலிகள் சுமந்தும் – அவள்
விழிகளில் வழிவது அன்பே...
தடைகளை உடைத்துத் தள்ளும்
தன்னம்பிக்கை இவள்!

பெண்மை என்பது பலவீனம் அல்ல
மென்மை கலந்த பெரும் வலிமை!
உலகை இயக்கும் அச்சாணி அவள்,
வாழும் தெய்வத்தின் மறு உருவம்!




ரி-20 இறுதிச் சமர்
இன்று இரவு 7 மணி
அஹமதாபாத் - நரேந்திரமோடி ஸ்டேடியம்
இந்தியா
எதிர்
நியூஸிலாந்து
IND
Suryakumar Yadav
NZ
Mitchell Santner
விளையாடிய போட்டிகள்
29
இந்தியா
வெற்றி 18
VS
நியூஸிலாந்து
வெற்றி 11
நடப்பு ரி-20 உலகக் கிண்ணத் தொடரில்
முதல்நிலை துடுப்பாட்ட வீரர்கள்
இந்தியா - அபிஷேக் ஷர்மா
மொத்த ஓட்டங்கள் - 182
நியூஸிலாந்து - ரிம் செய்பெட்
மொத்த ஓட்டங்கள் - 425
முதல்நிலை பந்துவீச்சாளர்கள்
இந்தியா - வருண் சக்கரவர்த்தி
மொத்த விக்கெட்டுகள் - 4
நியூஸிலாந்து - ஜாகூப் டப்பி
மொத்த விக்கெட்டுகள் - 7
இறுதிப் போட்டி

T20 உலகக்கிண்ணம்

ICC T20 WORLD CUP

# இந்தியா – நியூஸிலாந்து

## FINAL 2026

## டி20 உலகக்கிண்ணத் தொடர்களில் இந்தியா - நியூஸிலாந்து அணிகள்

| ஆண்டு | இந்தியா | நியூஸிலாந்து |
|---|---|---|
| 2007 | சம்பியன் | அரையிறுதி |
| 2009 | சூப்பர்-8 | சூப்பர்-8 |
| 2010 | சூப்பர்-8 | சூப்பர்-8 |
| 2012 | சூப்பர்-8 | சூப்பர்-8 |
| 2014 | 2ஆம் இடம் | சூப்பர்-10 |
| 2016 | அரையிறுதி | அரையிறுதி |
| 2021 | சூப்பர்-12 | 2ஆம் இடம் |
| 2022 | அரையிறுதி | அரையிறுதி |
| 2024 | சம்பியன் | குழுநிலை |
| 2026 | இறுதிப்போட்டி | இறுதிப்போட்டி |

### இன்று களம் காணும் இரு அணிகள்

### 15 பேர் கொண்ட இந்திய அணி

சூர்யகுமார் யாதவ் (அ.த.)
சஞ்சு சாம்சன் (வி.கா.)
அக்சர் படேல்
குல்தீப் யாதவ்
ஹர்திக் பாண்டியா
ஜஸ்பிரித் பும்ரா
இஷான் கிஷன் (வி.கா.)
ரிங்கு சிங்
முகமது சிராஜ்
வாஷிங்டன் சுந்தர்
சிவம் துபே
அபிஷேக் சர்மா
வருண் சக்கரவர்த்தி
அர்ஷ்தீப் சிங்
திலக் வர்மா

### 15 பேர் கொண்ட நியூஸிலாந்து அணி

ஜேம்ஸ் நீஷம்
டெவன் கான்வே (வி.கா.)
கோல் மெக்கோஞ்சி
டேரில் மிட்செல்
இஷ் சோதி
ஜேக்கப் டஃபி
மிட்செல் சாண்ட்னர் (அ.த.)
மார்க் சாப்மேன்
மேட் ஹென்றி
லாக்கி பெர்குசன்
கைல் ஜேமீசன்
டிம் சீபர்ட் (வி.கா.)
கிளென் பிலிப்ஸ்
பின் ஆலன்
ராச்சின் ரவீந்திர


வாண வேடிக்கை காட்டியவர்களும்
எதிரணிகளைத் திணற வைத்தவர்களும்
நடப்பு ரி-20 உலகக் கிண்ணத் துடுப்பாட்டத்தில்
அதிக ஓட்டங்கள் பெற்றோர்
1
சாஹிப்சாதா பர்ஹான்
(PAKISTAN)
383
2
பிரையன் பென்னட்
(ZIMBABWE)
292
3
ஃபின் ஆலன்
(NEW ZEALAND)
289
4
ஐடன் மார்க்ராம்
(SOUTH AFRICA)
286
5
ஜேக்கப் பெத்தேல்
(ENGLAND)
280
அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய வீரர்கள்
1
ஷாட்லி வான் ஷால்க்விக்
(USA)
13
2
முசரபானி ஆசீர்வாதம்
(ZIMBABWE)
13
3
அடில் ரஷித்
(ENGLAND)
13
4
வருண் சக்கரவர்த்தி
(INDIA)
13
5
லுங்கி என்கிடி
(SOUTH AFRICA)
12




# சர்வதேச அரங்கில் பேசும் அரச பிரதிநிதிகள் உரிய முறையில் தயார்படுத்தப்பட வேண்டும்

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவிப்பு

சர்வதேச அரங்குகளில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திப் பேசும் அரச பிரதிநிதிகள், கருத்துக்களை வெளியிடும் முன் உரிய முறையில் தயார்படுத்தப்பட வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ரஜீவ் அமரசூரிய வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவின் புதுடில்லியில் நடைபெற்ற ரைசினா கலந்துரையாடலில் “இந்தியப் பெருங்கடலின் எதிர்காலம்“ என்ற தலைப்பிலான குழு விவாதத்தில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் கலந்துகொண்டார்.

இதன்போது, இலங்கையை அண்மித்த கடல் பகுதியில் ஈரானியக் கப்பல்கள் தொடர்பான கேள்விக்கு அமைச்சர் அளித்த பதிலைத் தொடர்ந்து இந்த அறிக்கை வெளியாகியுள்ளது.

இந்த விவாதத்தின் போது தானும் சபையில் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ள ரஜீவ் அமரசூரிய, அமைச்சர்கள் எப்போதும் வெளிநாட்டுக் கொள்கை அல்லது சர்வதேச உறவுகளில் நிபுணர்களாக இருக்க முடியாது என்பதை ஏற்றுக் கொண்டார்.

இருப்பினும், சில விடயங்களை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதன்படி, சர்வதேச மேடைகளில் கேட்கப்படக்கூடிய சாத்தியமான கேள்விகள் மற்றும் இக்கட்டான சூழல்கள் குறித்து அமைச்சர்களுக்கு முன்கூட்டியே தெளிவுபடுத்துவது வெளிவிவகார அமைச்சு மற்றும் தூதரகங்களின் பொறுப்பாகும்.

குறிப்பாக, பிரபல ஊடகவியலாளர் பல்கி சர்மா விவாதத்தை வழிநடத்திய போது, ஈரானியக் கப்பல்கள் தொடர்பான கேள்விகள் கேட்கப்படும் என்பது முன்கூட்டியே கணிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

முறையான தயார்படுத்தல்கள் இல்லாதபோது, சர்வதேச அரங்குகளில் நாட்டின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துவதில் சிக்கல்கள் ஏற்படலாம் என அவர் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இன்று முதல் வெப்பச் சுட்டெண் எச்சரிக்கை மட்டத்தில் அதிகரிப்பு



இலங்கையின் சில மாகாணங்கள் மற்றும் மாவட்டங்களில் இன்று மனித உடலில் உணரப்படும் வெப்பத்தின் அளவு எச்சரிக்கை மட்டத்திற்கு அதிகரிக்கக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, சப்ரகமுவ, வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களுக்கும் கொழும்பு, கம்பஹா, வவுனியா, மன்னார், அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களுக்கும் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வெப்ப அதிகரிப்பு காரணமாக பொதுமக்கள் அதிக நேரம் வெயிலில் வேலை செய்வதைத் தவிர்க்குமாறும், போதியளவு நீர் அருந்துமாறும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

# ரணிலைக் கைது செய்த ஜனாதிபதி எச்சரிக்கையாக இருக்க வேண்டும்

## உதய கம்மன்பில தெரிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை கைது செய்த ஜனாதிபதி அநுர எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என பிவிதுரு ஹெல உறுமய அமைப்பின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார் .

தனது உத்தியோக பூர்வ எக்ஸ் தனத்திலேயே இதனை பதிவிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கைது செய்யப்பட்ட காரணமாக அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு உண்மையில் ஒரு குற்றமென்றால், இலங்கையில் இருந்த ஒவ்வொரு முன்னாள் ஜனாதிபதிகளும் கைது செய்யப்பட வேண்டும் என்பதே யதார்த்மாகும்.

தகவல் அறியும் உரிமையைப் பயன்படுத்தி ஒஷல ஹேரத் என்பவரால் வுல்வர்ஹாம்டன் பல்கலைக்கழகத்திடம் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 2023 இல் அந்தப் பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்தது ஒரு உத்தியோகபூர்வ அழைப்பின் பேரில் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ரணில் விக்ரமசிங்க கைது செய்யப்பட்ட நாளிலிருந்தே நான் கூறி வருவது இது ஒரு பயனற்ற விவாதம் என்பதாகும்.

ஒரு ஜனாதிபதியின் பயணங்கள் உத்தியோகபூர்வமானதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், பாதுகாப்பு மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை அரசாங்கம் வழங்க வேண்டும்.

அது உலக நியதியாகும் .இல்லையெனில், நாட்டுத் தலைவர்கள் பாதுகாவலர்கள் இல்லாமலும், பாதுகாப்பு வாகனங்கள் இல்லாமலும் தனிப்பட்ட பயணங்களில் செல்லும் போது எதிரிகளால் இலக்கு வைக்கப்படுவார்கள்.

இந்தக் கைது நடவடிக்கையின் பின்னணியில் உள்ள ஜனாதிபதி அநுரவுக்கும், எதிர்காலத்தில் இந்தக் கைது நடவடிக்கை தன்னைத்தானே தாக்கும் செயலாக அமைந்துள்ளது." என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கடல் வழித் தடைகள் காரணமாக முடங்கியது தேயிலை வர்த்தகம்



மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக இலங்கையின் பிரதான வருமானமான தேயிலைத் துறை கடும் சரிவைச் சந்தித்து வருவதாக இலங்கை தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் லயனெல் ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தாம் நில தேயிலையில் நூற்றுக்கு 50 வீதத்திற்கும் அதிகமான அல்லது அதற்கும் மேற்பட்ட அளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

அதிலிருந்து ஈரானுக்கு 10 முதல் 15 வீதத்திற்கும் அதிகமான அளவு செல்கிறது. அந்த நாட்டிற்கு நாம் அதிக விலையுடைய தேயிலையையே அனுப்புகின்றோம்.

அவர்களது யுத்த நிலைமை காரணமாக தேயிலை வாங்குவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. ஏனைய மத்திய கிழக்கு நாடுகளுக்குமான கடல் மார்க்கங்கள் தடைப்பட்டுள்ளதால் இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இது எங்களைப் பாதிப்பது எவ்வாறெனில், சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கு வாராந்தம் அவர்களது கொடுப்பனவுகளை வழங்க வேண்டியுள்ளது.

தேயிலை விற்பனை ஆகாவிட்டால் எங்களால் அதனை வழங்க முடியாது. இது தொடர்ந்தால் மிகவும் பாரிய நிதி நெருக்கடியை நாம் எதிர்கொள்ள வேண்டி வரும்.

இலங்கையில் சுமார் 5 இலட்சம் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் உள்ளனர். இத்தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டு சுமார் 2 மில்லியன் பேரின் வாழ்வாதாரமாகவும் உள்ளது." என்று தெரிவித்துள்ளார்.



# உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கத்தால் விசேட நடவடிக்கை

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவி வரும் போர்ச் சூழல் காரணமாக இலங்கையின் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் மற்றும் உணவுப் பாதுகாப்பில் ஏற்படக்கூடிய தாக்கங்களை முகாமைத்துவம் செய்வது குறிதது அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

இது தொடர்பில் உணவுக் கொள்கை மற்றும் உணவுப் பாதுகாப்புக் குழு நேற்று (6) விசேட ஆலோசனைகளை நடத்தியிருந்ததாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அமைச்சர்களான கே.டி. லால் காந்த மற்றும் வசந்த சமரசிங்க ஆகியோரின் தலைமையில் நாடாளுமன்ற வளாகத்தில்நடைபெற்றஇந்தகூட்டத்தில்,வரவிருக்கும் பண்டிகைக் காலத்திற்கான அத்தியாவசிய உணவுப் பொருட்களின் கையிருப்பை உறுதிப்படுத்துவது மற்றும் அவற்றின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்துவது குறித்து முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது, உள்நாட்டு உணவு உற்பத்தி மற்றும் மீன்பிடித் துறைகளுக்கு முன்னுரிமை அளித்து தடையின்றி எரிபொருளை வழங்குவதற்கான முறையான பொறிமுறையை உருவாக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

அத்துடன், விவசாயத்திற்குத் தேவையான உரம் மற்றும் இரசாயனப் பொருட்களின் இறக்குமதியில் உலகளாவிய ரீதியில் தடைகள் ஏற்பட்டால் அதனை எவ்வாறு கையாளுவது என்பது குறித்தும் விரிவாக ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சில விமான சேவைகளை இரத்து; ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நடவடிக்கை




மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக, நேற்று நள்ளிரவு வரை சில விமான சேவைகளை இரத்து செய்ய ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நடவடிக்கை எடுத்தது.

இதில் கட்டுநாயக்கவில் இருந்து டுபாய், ரியாத், டோஹா மற்றும் தம்மாம் ஆகிய இடங்களுக்கான சில விமான சேவைகளும் அடங்குகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பயணிகள் தமது விமான பயணங்களின் தற்போதைய நிலை குறித்த விபரங்களை www.srilankan.com என்ற இணையதளத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும் என அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

அத்துடன், இலங்கையிலுள்ள பயணிகள் 1979 என்ற இலக்கத்தின் ஊடாகவும், வெளிநாடுகளில் உள்ளவர்கள் 0094 11 777 1979 என்ற இலக்கத்தின் ஊடாகவும், மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், மேலதிக தகவல்களுக்கு அருகிலுள்ள ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் அலுவலகம் அல்லது விமான பயணச் சீட்டைப் பெற்றுக்கொண்ட முகவரைத் தொடர்பு கொள்ளுமாறு ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் வலியுறுத்தியுள்ளது.










# பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையில் சிறப்பாக இடம்பெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டி

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்று சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுள்ளது. அதிபர் திருமதி இந்திராணி முரளிதரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி உமா தங்கவேலும், சிறப்பு விருந்தினர்களாக கல்வி அமைச்சின் தமிழ்ப் பாடசாலை அபிவிருத்தி பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பாலராணி சிறீதரன், தாய் நிலம் தற்காப்புக்கலை நிலைய தலைவரும் யோகா ஆசான் ம.இரத்தினசோதி, பருத்தித்துறை நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல் மற்றும் திணைக்கள பொறுப்பதிகாரிகள், அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ச பலர் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.

மர்கர்றோய்ட் (சிவப்பு), பார்க்ஸ் (நீலம்), கிறீன்வூட் (பச்சை), எவறெர்ரி (மஞ்சள்) என நான்கு இல்லங்களாக மாணவர்கள் போட்டிகளில் பங்கேற்றிருந்தனர்.

போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவியர்களுக்கு பதக்கம் அணிவித்து சாண்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. ஒட்டுமொத்த வெளிப்பாடாக அதிகூடிய புள்ளிகளை பெற்று மர்கர்றோய்ட் (சிவப்பு) இல்லம் முதலிடத்தையும், எவறெர்ரி (மஞ்சள்) இல்லம் இரண்டாவது இடத்தையும், கிறீன்வூட் (பச்சை) இல்லம் மூன்றாவது இடத்தையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.





















# தமிழகத்தில் த.வெ.க ஆட்சி அமைந்தவுடன் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் 2500 ரூபா

## விஜய் தேர்தல் வாக்குறுதி



தமிழகத்தில் த.வெ.க. ஆட்சி அமைந்தவுடன் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் 2500 ரூபா வழங்கப்படும், பெண்களின் திருமணத்துக்கு ஒரு பவுன் தங்கம், அனைத்துப் பஸ்களிலும் பெண்களுக்கு இலவசப் பயணம் உள்ளிட்டவை செயல்படுத்தப்படவுள்ளன என த.வெ.க. தலைவர் விஜய் தேர்தல் வாக்குறுதிகளாக அறிவித்துள்ளார்.

சென்னையில் த.வெ.க. சார்பில் கொண்டாடப்பட்ட மகளிர் தின விழாவில் அக்கட்சியின் தலைவர் விஜய் வெளியிட்ட வாக்குறுதிகள் விவரம்:

பெண்கள், குழந்தைகள், முதியோர் நலனில் அக்கறை செலுத்துவதே தவெகவின் அடிப்படை முக்கிய நிலைப்பாடு. அதன்படி அதற்கென தனி இலாகா ஏற்படுத்தப்படும். அந்த இலாகா எனது நேரடி கட்டுப்பாட்டில் இருக்கும்.

தமிழகத்தை இந்தியாவின் நம்பர் 1 மாநிலம் என தம்பட்டம் அடிக்கும் தி.மு.க. அரசு, மகளிர் உரிமைத் தொகையாக வெறும் ஆயிரம் ரூபா மட்டும் வழங்குகிறது. எனவே, த.வெ.க. அரசில் 60 வயது வரை உள்ள அனைத்து குடும்பத் தலைவிகளுக்கும் மாதம் 2,500 ரூபா வழங்கப்படும். இதில் மாநில, ஒன்றிய அரசின் ஊழியர்களாக இருக்கும் குடும்பங்களுக்கு மட்டும் விதிவிலக்கு.

'அன்னபூரணி சூப்பர் சிக்ஸ்' திட்டத்தின் கீழ், ஒவ்வொரு குடும்பத்துக்கும் வருடத்துக்கு 6 காஸ் சிலிண்டர்கள் கட்டணமின்றி வழங்கப்படவுள்ளன. இது தாய்மார்கள் வயிற்றில் பால் வார்க்கும் திட்டமாக இருக்கும்.

அண்ணன் சீர் திட்டம் மூலம், பெண்களின் திருமணத்துக்கு ஒரு பவுன் தங்கம், தரமான பட்டு சேலையும் அளிக்கப்படும்.

காமராஜர் கல்வி உறுதி திட்டத்தின் கீழ், 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை இடைநிற்றலே இல்லாமல் குழந்தைகள் கல்வி கற்க, அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலருக்கு 15 ஆயிரம் இந்திய ரூபா பொருளாதார உதவி வழங்கப்படும்.

இப்போது "பிங்க்" நிற பஸ்களில் மட்டும் பெண்களுக்கு இலவச பயணத்திட்டம் உள்ளது. த.வெ.க. அரசு அமைந்தால் வெற்றிப் பயணம் திட்டத்தின் படி, அரசுப் போக்குவரத்து கழகத்தின் அனைத்துப் பஸ்களிலும் பெண்கள் இலவசமாக பயணிக்கலாம்.

பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்ய ராணி வேலுநாச்சியார் படை அமைக்கப்படும். சாதாரண உடையில் 500 படைகள் மாநிலம் முழுவதும் கண்காணிப்பில் இருப்பார்கள்.

பெண்களுக்கு எதிரான குற்ற வழக்குகளை விசாரித்து விரைவாக நீதி வழங்க அஞ்சலையம்மாள் விரைவு நீதி மன்றங்கள் அமைக்கப்படும்.

பொது போக்குவரத்து வாகனங்களில் பயணிக்கும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய எச்சரிக்கை பொத்தான்கள் அமைக்கப்படும்.

சி.சி.டி.வி. கமராக்கள் இல்லாத இடமே இல்லை என்ற வகையில் "ஷீரோ டார்க் ஸ்பாட்டுகள்" அமைக்கப்படும்.

பொதுவிநியோக கடைகள், பாடசாலைகள், கல்லூரிகள் விலையில்லா "சானிடரி நப்கின்கள்" வழங்கப்படும்.

சிங்கப்பெண்கள் மேம்பாட்டுத் திட்டம் மூலம் நிலுவையிலுள்ள கடன்களை திரும்ப செலுத்துவதன் மூலமும், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு 5 லட்சம் ரூபா வரை வட்டியில்லா கடன் வழங்கப்படும். இவர்கள் தொழில் தொடங்கினால் 5 லட்சம் இந்திய ரூபா 100 ரூபா மானியத்தில் வழங்கப்படும்.

தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் மூலம், தமிழகத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம், குழந்தைகளுக்கான வரவேற்பு "கிட்" வழங்கப்படும் என்பன உள்ளிட்ட வாக்குறுதிகளை விஜய் வெளியிட்டார்.

# கருணாநிதியின் ஞானம் ஸ்டாலினிடம் உள்ளது

## ஓ.பன்னீர்செல்வம் பெருமிதம்




கருணாநிதியின் ஞானமும் ஜெயலலிதாவின் வேகமும் ஸ்டாலினிடம் உள்ளன என்று தி.மு.கவுடன் ஆதரவாளர்களை எணைக்கும் மதுரை விழாவில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் பெருமிதம் தெரிவித்தார்.

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே ராயப்பாளையத்தில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் தி.மு.கவில் இணையும் விழா நடந்தது. முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில், ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் ஆயிரக்கணக்கானோர் இணைந்தனர். இவ்விழாவில் ஓ.பன்னீர்செல்வம் உரையாற்றுகையில்,

"என்னுடைய 50 ஆண்டு கால அரசியல் வாழ்க்கையில் நான் ஏற்றுக் கொண்ட தலைமைக்கு விசுவாசமாகவும், கொண்ட கொள்கைக்கு நேர்மையாகவும், கொடுத்த பணிக்கு மனசாட்சியாகவும் நன்றியுடன் பணியாற்றி வந்துள்ளேன். நான் இருந்த இயக்கத்தில் எனக்கென்று ஒரு தனி அணியை உருவாக்க எண்ணியதில்லை. கட்சியின் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு என் கடமையை ஆற்றி வந்திருக்கிறேன்.

எம்.ஜி.ஆரால் தொடங்கப்பட்ட அ.தி.மு.க. இன்று, அதிமுகவாக இல்லை. தொண்டர்கள்தான் தலைமையை தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற திருத்தக்கூடாத கட்சி விதிகளை திருத்தனர். தொண்டர்கள் உரிமைகள் பறித்தனர். ஜெயலலிதா வழி நடத்திய, வளர்த்த அ.தி.மு.க. இன்று இல்லை. தனக்கான, தனது பதவியை மட்டுமே குறியாக கொண்ட ஒருவரின் சுயநல அரசியலால் எம்.ஜி.ஆர். உருவாக்கிய அ.தி.மு.க. இன்று அபகரிப்பு தி.மு.கவாக மாறிவிட்டது.

பெரியாரின் திராவிட சிந்தாந்ததிற்கு எதிராகவும், அண்ணாவின் சமூக நீதிக்கு முரணாகவும் செயல்பட்டு வருகிறது. பறிக்கப்பட்ட உரிமைகளை மீட்க சட்டப் போராட்டங்களை நடத்தினேன். தலைமைக்கு உண்மையாக உழைத்திற்கும், விசுவாசமாக நடந்து கொண்டதிற்காகவும் குறுக்கு வழியில் வந்தவர்களால் நான் எப்படியெல்லாம் பழிவாங்கப்பட்டேன் என்பது அனைவருக்கும் தெரியும்.

அப்படி பழிவாங்கப்பட்ட என்னை, முதல்வர் ஸ்டாலின் அன்போடு அழைத்து பண்போடு பாசம் காட்டி, ஜெயலலிதாவின் அரவணைப்பை எனக்கும், என்னை சார்ந்தவர்களுக்கும் வழங்கியுள்ளார்.

சட்டத்தை வளைத்து, திட்டம் போடலாம். கட்சி விதிகளை மாற்றி வட்டமும் போடலாம். தொண்டர்கள் உரிமைகளை பறித்துவிட்டு தொண்டை கிழிய கத்தலாம். கட்சியை கைப்பற்றலாம். ஆனால், வெற்றிபெற முடியுமா என்றால் இல்லை. தொடர் தோல்விதான் தொடர்கதையாக இருக்கிறது. இனியும், அவர்கள் தோல்வி தொடர்ந்து கொண்டு இருக்கும்." என்று தெரிவித்தார்.





# ட்ரம்ப்புக்கு நடிகர் கமல்ஹாசன் எச்சரிக்கையுடன் பகிரங்க மடல்

இந்தியாவின் உள்விவகாரங்கள் மற்றும் இறையாண்மை குறித்து அமெரிக்கா தலையிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் ஒரு சுதந்திர தேசமான இந்தியா எவ்வித வெளிநாட்டுக் கட்டளைகளுக்கும் பணியாது என்றும் மக்கள் நீதி மய்யத்தின் தலைவரும் நடிகருமான கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை விளித்து சமூக வலைத்தளங்களில் அவர் வெளியிட்டுள்ள பகிரங்கக் கடிதத்தில், இந்தியக் குடிமகன் என்ற முறையில் சில காரசாரமான கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

“நாங்கள் (இந்திய மக்கள்) சுதந்திரமான மற்றும் இறையாண்மை கொண்ட தேசத்தைச் சேர்ந்தவர்கள். தொலைதூரத்திலுள்ள வெளிநாட்டுக் கரைகளிலிருந்து வரும் கட்டளைகளை நாங்கள் இனி ஒருபோதும் ஏற்கப்போவதில்லை.

எனவே, உங்களால் முடிந்தவரை உங்கள் சொந்த வேலையை மட்டும் கவனிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

இறையாண்மை கொண்ட நாடுகளுக்கு இடையிலான பரஸ்பர மரியாதை மட்டுமே நீடித்த உலகளாவிய அமைதிக்கு ஒரே அடித்தளமாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், அமெரிக்காவுக்கு அந்நாட்டு மக்களுக்கும் அமைதியும் வளமும் கிடைக்கப் பிரார்த்திப்பதாகவும் ஒரு பெருமிதமுள்ள இந்தியக் குடிமகன் மற்றும் மக்கள் நீதி மையத்தின் நிறுவுனர் என்ற ரீதியில் கமல்ஹாசன் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# ஈரானின் 42 கப்பல்கள் தரைமட்டம்: டொனால்ட் ட்ரம்ப் அதிரடி அறிவிப்பு

ஈரானுக்கு எதிராக 3 நாள்களாக முன்னெடுக்கப்பட்ட தொடர் தாக்குதல்களில், அந்த நாட்டிற்குச் சொந்தமான 42 கடற்படைக் கப்பல்கள் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளன என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

புளோரிடாவில் இடம்பெற்ற விசேட நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன் ஈரானின் வான்படை பலம் மற்றும் தொடர்பாடல் கட்டமைப்புகள் பெருமளவில் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளன.

ஈரான் அணு ஆயுதத்தைத் தயாரிக்கும் மிக நெருங்கிய நிலையை எட்டியிருந்ததால், அவர்களின் அணுசக்தி வேலைத்திட்டத்துடன் தொடர்புடைய மையங்களை இலக்கு வைத்து இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த தாக்குதலானது ஈரானின் இராணுவ வலிமைக்குக் கொடுக்கப்பட்ட பாரிய அடி எனவும் இது ஒரு மிகப் பெரிய வெற்றி என்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சுட்டிக்காட்டினார்.







# ஈரானில் கடந்த ஒரு வாரத்தில் 3,000 இலக்குகள் மீது தாக்குதல்

## அமெரிக்க இராணுவம் தகவல்

கடந்த வாரத்தில் ஈரானில் உள்ள 3000 இலக்குகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்பதை அமெரிக்க இராணுவம் உறுதிப்படுத்தியுள்ளது.

இதுகுறித்து அமெரிக்க இராணுவம் தரப்பில் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில், 'ஒபரேஷன் எபிக் ஃப்யூரி'யின் மூலம் முதல் வாரத்தில் அமெரிக்கப் படைகள் 3,000 இற்கும் மேற்பட்ட இலக்குகளைத் தாக்கியுள்ளன. நாங்கள் எங்கள் வேகத்தைக் குறைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூழலில் டொனால்ட் ட்ரம்ப், "நிபந்தனையற்ற சரணடைதலைத் தவிர ஈரானுடன் எந்த ஒப்பந்தமும் இருக்காது. எந்தவொரு ராஜதந்திர பேச்சுவார்த்தைகளும் தொடரும் முன் ஈரான் சரணடைய வேண்டும். அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகள், குறிப்பாக இஸ்ரேலும், ஈரான் நாட்டின் தலைமை முழுமையாக மாற்றப்பட்டு சிறந்த மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னரே ஈரானுடன் ஒப்பந்தம் மேற்கொள்வது குறித்து பரிசீலிப்போம்." என்று ட்ரூத் சமூக வலைதளத்தில் வலியுறுத்தினார்.

மேலும், "ஈரானில் ஒரு சிறந்த மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, நாங்களும், எங்கள் துணிச்சலான கூட்டாளிகளும், ஈரானை அழிவின் விளிம்பிலிருந்து மீட்டெடுக்க அயராது பாடுபடுவோம். இது பொருளாதார ரீதியாக முன்பை விட பெரியதாகவும், சிறந்ததாகவும், வலிமையாகவும் ஈரானை மாற்றும். ஈரான் ஒரு சிறந்த எதிர்காலத்தைக் கொண்டிருக்கும். "ஈரானை மீண்டும் பெரியதாக்குங்கள்" என்று அவரது பதிவில் கூறப்பட்டுள்ளது.







# இன்றைய ராசி பலன்கள்- 08.03.2026




இன்று விரும்பிய பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும் வகையில் பயனுள்ள திட்டங்களை தீட்டுங்கள்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். பல நன்மைகளை அடைவதற்கான சாத்தியம் உள்ளது. கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

உங்கள் நெருங்கிய நண்பர் ஒருவரின் திருமண விழாவில் இருவரும் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். இது உங்களின் வாழ்க்கைத் துணைக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.பண வரவு சாதகமாக உள்ளது. உங்களின் சேமிக்கும் ஆற்றல் உயரும், இதனால் பொருளாதார பாதுகாப்பு காணப்படும்.




இன்று மகிழ்ச்சி அலை வீசும். முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலன்களைத் தரும்.

உங்களின் தனித்தன்மைக்கான பாராட்டைப் பெறுவீர்கள். உங்கள் கீழ் பணிபுரிபவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்களின் தகவல் பரிமாற்றம் மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும். புதிய முதலீடுகளுக்கு திட்டமிடலாம்.

இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் உறுதியும் ஆற்றலும் நிறைந்திருக்கும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கலாம். தைரியம் மற்றும் உறுதி கொண்டால் நன்மை கிடைக்கும். இன்று மொத்தத்தில் வளர்ச்சி கிடைக்கும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

நீங்கள் புத்துணர்ச்சியோடு வேலையை மகிழ்ச்சியுடன் செய்வீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இருக்கும். இன்று அதிர்ஷ்டமான நாள். பண வரவு காணப்படும்.

உங்கள் மன வலிமை காரணமாக இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




இன்று உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் செயல்கள் சுமுகமாக நடக்க அதிக முயற்சிகள் எடுக்க வேண்டும். சில சமயங்களில் நம்பிக்கை இழப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி காணலாம்.

அதிக பணிகளை சந்திக்க நேரும். உங்கள் சக பணியாளர்களுடன் சகஜமாகப் பழகவும்.

நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையிடம் புரிந்துகொண்ட மனநிலையோடு பழக வேண்டும்.நிதிநிலைமை சீராக இருக்காது. இன்றைய செலவினங்களை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. தகுந்த மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது நல்லது.




இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும். மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் இருப்பது நல்லது. இன்று தெளிந்த மனதுடன் இருந்தால் உங்களுக்கு சாதகமான முடிவுகளை எடுக்கலாம்.

இன்று பணிகள் இறுக்கமாக காணப்படும். பணியின் போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் மனதில் உள்ள கசப்பான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள்.இதனால் குழப்பம் ஏற்படும். உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

இன்று தேவையற்ற செலவினங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும். சிறிது பணம் இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று முதுகுவலி வருவதற்கான வாய்ப்பு உள்ளது. பிரார்த்தனை அல்லது தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்று உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் செயல்கள் சுமுகமாக நடக்க அதிக முயற்சிகள் எடுக்க வேண்டும். சில சமயங்களில் நம்பிக்கை இழப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி காணலாம்.

அதிக பணிகளை சந்திக்க நேரும். உங்கள் சக பணியாளர்களுடன் சகஜமாகப் பழகவும்.

நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையிடம் புரிந்துகொண்ட மனநிலையோடு பழக வேண்டும்.

நிதிநிலைமை சீராக இருக்காது. இன்றைய செலவினங்களை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று மகிழ்ச்சியளிக்கத்தக்க வகையில் வளர்ச்சி காணப்படும். உங்களிடம் எதிர்காலத்தைப் பற்றிய பரந்த நோக்கு காணப்படும். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய கடினமாக உழைப்பீர்கள். உங்கள் வழியில் வரும் தடைகளை தகர்த்தெறிவீர்கள்.

நீங்கள் பலனை அதிகம் எதிர்பார்க்காமல் பணியாற்றுவீர்கள். இதனால் குறித்த நேரத்தில் பணிகளை ஆற்றுவீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டையும் ஆதரவையும் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாகவும் விசுவாசமாகவும் இருப்பீர்கள். இதனால் இருவரும் நல்ல உறவை பராமரிப்பீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். வங்கியிருப்பு உங்களுக்கு சாதகமான வகையில் பராமரிப்பீர்கள்.




இன்று சுமுகமான பலன்கள் காணப்படும். உங்கள் லட்சியங்களை அடைய இந்நாளை பயன்படுத்திக் கொள்ளலாம். இன்று உங்கள் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் உறுதியானது. இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையிடம் நம்பிக்கை உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சீராக இருக்கும். இன்று நிதி வளர்ச்சிக்கு உங்கள் ஆற்றலை பயன்படுத்திக் கொள்ளலாம்.

# இன்றைய ராசி பலன்கள்- 08.02.2026




இன்று நீங்கள் உற்சாகத்துடன் இருக்க வேண்டும். அதிக சிந்தனை களை தவிர்க்க வேண்டியது அவசியம். ஆன்மீகத்தில் ஈடுபட்டு அமைதி காணலாம்.

அதிக பணிகள் காரணமாக பணி யில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. உங்கள் பொறுப்புகளை ஆற்றும் போது கவனமாக ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் எரிச்சலும் கோபமும் அடைவீர்கள். எனவே உங்கள் பிரியமானவரிடம் நட்பு முறையோடு பழகுவது நல்லது.

அஜாக்கிரதை காரணமாக பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. நிதி நிலைமையை மோசமாக்கக்கூடிய வகையில் தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படலாம்.




இன்று நீங்கள் ஆன்மீகத்தில் ஈடுபடும் சூழல் ஏற்படும். இதனால் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும். சமூக கூட்டங்களில் கலந்து கொள் வீர்கள். புதிய நண்பர்களை உருவாக் கிக் கொள்வீர்கள்.

வெற்றிகரமான பலன்களைக் காண கடினமாக உழைக்க வேண்டும். சில பணிகள் முடிக்க முடியாமல் நிலுவையில் வைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க அத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். கடன் வாங்க நேரலாம்.




இன்று காணப்படும் கடினமான சூழல் காரணமாக தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். நம்பிக்கையை வளர்த்துக் கொள்வதன் மூலம் இந்தச் சூழ்நிலைகளை ஜெயிக்கலாம். பிரார்த்தனை நல்ல பலன் தரும்.

பணிகளைக் குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணியில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்களின் குழப்பமான மன உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்த எண்ணுவீர்கள். இருவரும் சமமாகப் பழக மகிழ்ச்சியாக நட்புடன் பழக வேண்டும்.

இன்று பண இழப்பு ஏற்படலாம். உங்களின் பிரியமான ஒருவரின் உடல் நிலைக்காக பணம் செலவு செய்ய நேரும்.தோல் சம்பந்தமான ஒவ்வாமை காணப்படும். எண்ணெய் பதார்த்தங்களை தவிர்க்க வேண்டும்.




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. இன்று சில விஷயங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பேண அதனை தவிர்த்தல் நல்லது.

வீட்டுப் புனரமைப்பிற்காக பணம் செலவு செய்ய நேரலாம். தேவையற்ற செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தும்.



# மூழ்கடிக்கப்பட்ட ஈரானிய கப்பலின் சிதைவுகள் ஹிக்கடுவ கடற்கரையில் கரை ஒதுங்குகின்றன?

அண்மையில் அமெரிக்காவால் தாக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஈரா னிய கப்பலின் பல சிதைவுகள் இலங் கையின் காலி கடற்கரையில் கரையொ துங்கியுள்ளன எனத் தகவல் வெளியா கியுள்ளது.

அந்தக் கப்பலுக்கு உரித்தானவை என சந்தேகிக்கப்படும் பொருள்கள் நேற்று ஹிக்கடுவ முதல் சீனிகம வரை யிலான கடற்கரையில் கரை ஒதுங்கி யிருக்கின்றன எனத் தெரிவிக்கப்ப டுகின்றது.

கடற்கரை முழுவதும் டீசல் கறைகள் காணப்படுகின்றன எனவும், மீன்களும் இறந்துள்ளன எனவும் அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

இதன் காரணமாக சுற்றுலாப் பயணி கள் இந்த கடற்கரைக்கு வருவதில்லை என சுட்டிக்காட்டிய அவர்கள் உரிய அதிகாரிகள் இந்த விடயத்தை விரைவில் ஆராய்ந்து ஒரு தீர்வை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

இலங்கைக்கு அருகில் இந்து சமுத்திரத்தில் “IRINS Dena“ என்ற ஈரானிய போர்க்கப்பலை அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் தாக்கி மூழ்கடித்ததாகத் தெரி விக்கப்பட்டது.